Sub Court, Eraniel O.S.**No. 113/2021**

09.02.2023

வா.சா.4 திரு. ஷானவாஸ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் வாதி என்னுடைய அப்பா என்றால் சரிதான் நான் பி.எஸ்.சி. ஓட்டல் நிர்வாகம் படித்துள்ளேன். நான் திருவனந்தபுரத்தில் வேலை பார்த்து வருகிறேன். என்னுடைய முதல் விசாரணை நிருபண வாக்குமூலத்திற்கு தகவல் சொன்னது என்னுடைய அப்பா. அதிலுள்ள விபரங்கள் என் அப்பாவிற்கு தான் தெரியும் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு உரிமைப்பட்ட கடை எண்.11/88 பி ஜாகீர்உசேன் என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த கடையை நடத்துவது சம்மந்தமாக என் தகப்பனாருக்கும் ஜாகீர்உசேனுக்கும் பிரச்சனை உண்டு என்றால் சரிதான். அது சம்மந்தமாக ஜாகீர்உசேன் மின்சார வாரியத்திற்கும், மணவாளக்குறிச்சி காவல் நிலையத்திற்கும் புகார் கொடுத்துள்ளார் என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது. என் தகப்பனாருக்கும், ஜாகீர்உசேனுக்கும் நீதிமன்றத்தில் வழக்கு நடந்த விபரம் எனக்குத் தெரியும். ஜாகீர்உசேனும் நாங்களும் உறவினர்கள் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகளின் பெயர் விபரம் எனக்குத் தெரியாது. 18.01.2021ம் தேதி மின்வாரிய கண்காணிப்பு பொறியாளருக்கு ஜாகீர்உசேன் அனுப்பிய புகாரின் பேரில் இளநிலை பொறியாளர் 25.02.2021ம் தேதி ஜாகீர்உசேன் நடத்திய கடைக்கு ஆய்வு செய்வதற்காக வந்தார் என்றால் சரிதான். ஆய்வு செய்வதற்கு முன் முறைப்படி அறிவிப்பு கொடுத்து தான் வந்தார்கள் என்றால் அது எனக்குத் தெரியாது. அவர்கள் வந்த போது நான், என் தகப்பனார், என்னுடைய நண்பர்கள் அவர்களை தகாத வார்த்தைகள் பேசி அரசு பணியை செய்ய விடாமல் தடுத்தோம் என்றால் சரியல்ல. என் மீதும், என் தகப்பனார் மீதும், என் நண்பர்கள் மீதும் 3ம் பிரதிவாதி மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் பிணையில் வந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு தற்போதும் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதை பொறுத்து நாங்கள் வேறு மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 3ம் பிரதிவாதி என் தகப்பனாரை கேவலப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் நாங்கள் அரசு அதிகாரிகளின் பணியை செய்யவிடாமல் தடுத்ததால் தான் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தில் வா.சா.ஆ.5 ஆக பென்டிரைவ் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது உண்மையில்லை என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி

கொடுத்த குற்ற வழக்கிலிருந்து தப்பிக்க வேண்டும் என்பதற்காக என் அப்பா கூறி நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.